]

# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
# KOKUVIL HINDU COLLEGE
# OLD STUDENTS ASSOCIATION (CANADA)
# 2017

## 18 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்
## பேச்சுப் போட்டி

## கனடாவில் தமிழர் கலாச்சாரம்

பல்லின மக்கள் வாழும் கனடா நாட்டிலே தங்கள் சமயம், கலை, பண்பாடு என்பவற்றை தங்குதடையின்றி பரப்பி வாழ சட்டம், ஒழுங்கு துணை செய்கின்றது. உலகில் எங்கும் காணமுடியாத நிதர்சனங்களில் இது மறுக்க முடீயாத உண்மை ஆகும். தத்தம் நாடுகளில்கூட அனுபவிக்க முடியாத சகல சுதந்திரங்களும் இங்கே கிடைக்கின்றன.

தமிழர் கலாச்சாரமானது தனித்துவமானது. அவர்கள் தனித்துவமான தங்கள் மொழி, சமயம், உடை, உணவு, கலை, பண்பாடு ஆகியவற்றைத் தாயகத்தில் பேணிப் பாதுகாப்பதோடு நின்றுவிடாது தாம் புலம்பெயர்ந்த நாடுகளிலும் .அவற்றை நெறிப்படுத்தி வருவது நாமறிந்ததே.

தமிழர்களின் திருமறையான திருக்குறள் உலகில் பலமொழிகளில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அதனையே மகாகவி பாரதியாரும் திறமையான புலமையெனில் அதனை வெளிநாட்டவர் வணக்கம் செய்தல் வேண்டும் என்றார். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற தமிழ் வாசகம் பிரான்ஸ் நாட்டின் தலைநகராம் பாரிசில் உள்ள ஐக்கிய நாடுகள் கல்வி கலாச்சார ஸ்தாபனத்தில் எழுதப்பட்டு உள்ளது. இவை அனைத்தும் எமது கலாச்சார விழுமியத்தை பறைசாற்றி நிற்கும்போது வேறு கலாச்சாரத்தை பின்பற்ற நினைக்கலாமா?

கனடிய மண்ணில் எமது கலாச்சாரத்தை மென்மேலும் பரவும் வகையில் உழைத்து வருகிறார்கள். இரு தசாப்த காலத்தில் தமிழ் மணம், தமிழ் ஒலி, பிறசமூகத்தோடு பின்னிப் பிணைந்துவிட்டது. தமிழரின் அளப்பரிய செயல்கள் பாரதியாரின் கனவுகளை நனவாக்கிவிட்டன என்றே கூறலாம்.

ஒரு நாட்டின் மக்கள் சமுதாயம் தனது கலாச்சாரச் சூழலில் இம்மியளவும் வழுவாது வாழ அவர்கள் தங்கள் மொழியை மதிக்க வேண்டும். அதன் பெருமையை, சால்பை அறிந்துகொள்ள வேண்டும். மொழிகளை மறந்தவன் கண்ணிருந்தும் குருடன். தனது தாய்மொழியைப் பேச முடியாதவன் வாயிருந்தும் ஊமை என்று சான்றோர் சொல்லக் கேட்டிருக்கின்றோம்.

தமிழ் மொழியில் பல சிறந்த நூல்கள் உள்ளன. இவைகளை வாசிப்பதால் நாங்கள் நல்லறிவு பெறமுடியும். பல பெரியாரது வாழ்க்கைத் தத்துவங்கள், அறிவு நூல்கள், கவிதைகள், ஆக்கங்கள் எனப் பலப்பல உண்டு. காலச்சூழல் மட்டுமன்றி ஒரு மொழியில் தாக்கத்தை மாற்றுமொழிகளும் உண்டாக்கலாம் என்பதற்கு உதாரணமாக கனடா நாட்டில் எமது மாணவர்கள் மொழி மறந்து விழிமூடி அதள பாதாளத்தை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்து உள்ளனர். இது எங்குபோய் முடியுமோ என்ற ஏக்கம் எங்கள் பெற்றோருக்கு மட்டுமன்றி அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது.

மொழியின் இனிமையை அறியாதவர் எவ்வாறு கலாச்சாரத்தை அறிவர். எல்லோரும் முழுமனதுடன் தமிழைக் கற்க முன்வர வேண்டும். தமிழர் தம் விழுமியங்களைத் தாங்கி வளர்க்கும் விழுதுகளாக